## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புவிச்சரிதவியல் அளவை, சுரங்கங்கள் பணியகத்தினதும் (‘‘பணியகம்’’), அதன் துணைக் கம்பனியினதும் (‘‘தொகுதி’’) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பணியகத்தினதும், தொகுதியினதும் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பணியகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பணியகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பணியகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பணியகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது

தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பணியகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பணியகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பணியகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 புவிச் சரிதவியல், அளவை மற்றும் சுரங்கப் பணியகம்

#### 1.5.1.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டின் போதும், 2024 ஆம் ஆண்டின் போதும் சேர்க்கப்பட்ட அரசிறை வருமானத்தில் திறைசேரிக்கு அனுப்ப வேண்டியதாக பணியகத்தால் கணிப்பிடப்பட்ட ரூபா 4,557.55 மில்லியன் தொகை, ஒதுக்கத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டிற்குரிய பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட அரசிறை ரூபா 1,468.05 | இது எதிர்காலத்தில் சரி செய்யப்படும். கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டுகளுக்கு உரியதாக சேகரிக்கப்பட்ட அரசிறைப் பெறுமதி ரூபா 333.64 மில்லியனில் 2023, 2022 ஆக | பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டிய எனினும் பணியகத்தின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ள அரசிறை பொதுத் திறைசேரிக்கு அனுப்ப வேண்டி இருந்ததுடன் திறைசேரிக்கு |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்களில் கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.<br>2024 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 3,468.05 மில்லியன் பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,089.5 மில்லியன் ஆன செலுத்த வேண்டிய அரசிறை நடைமுறைப் பொறுப்புக்களாக காண்பிக்கப் பட்டிருக்கவில்லை.<br>பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் PED/1/GSMB/3/11(i) மற்றும் 2023 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் பணியகத்தால் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக சேகரிக்கப்பட்ட அரசிறை வருமானத்தில் முறையே 70 சதவீதம் மற்றும் 75 சதவீதம் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பணியகத்தால் 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 333.64 மில்லியன அரசிறை முன்னைய ஆண்டுகளுக்கு உரியதாக சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அப் பெறுமதியில் 2023 ஆம் ஆண்டுக்குரிய அரசிறை இனங்கண்டு அதில் 70 சதவீதம் திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மொத்த பெறுமதியும் பணியகத்தின் வருமானமாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுகளுக்கு உரியதாக பெறப்பட்ட பெறுமதியும் உள்ளடங்கியுள்ளது. தற்போது காணப்படுகின்ற கணக்கீட்டு மென்பொருள் முறைமையின் மூலம் அரசிறை பெறுமதிகளுக்கு உரிய ஆண்டு என்ன என்பது தொடர்பாக சரியாக இனங்காண்பதற்கான திட்ட முறைமை ஒன்று காணப்படாமையினால் அரசிறை பெறுமதிக்கு உரியதான ஆண்டு என்ன என்பது தொடர்பாக கணக்கீட்டு முறைமையில் இனங்காண்பதற்கு திட்ட முறைமை ஒன்றைத் தயாரிப்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2025 ஆம் ஆண்டு முதல் சரியான திட்ட முறைமையின் படி அரசிறைப் பணம் பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். | செலுத்த வேண்டிய சரியான அரசிறைத் தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நாடு முழுவதும் அமைந்துள்ள பிரதேச செயலகங்களின் மூலம் மண், மணல் மற்றும் கிரவல் போக்குவரத்து அனுமதிப் பத்திரக் கட்டணமாக 2024 ஆம் ஆண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்ட வருமானத்தில் ரூபா 22.48 மில்லியன் தொகை 2023 ஆம் ஆண்டிற்கு உரியதாக இருந்தமையால் 2024 ஆம் ஆண்டின் இலாபம் அப் பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குவதுடன் எதிர் காலத்தில் சரி செய்யப்படும். | போக்குவரத்து அனுமதிப் பத்திர வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | உதவிப் பணிப்பாளர் (சட்டம்) அவரின் 2025 மே 07 ஆம் திகதிய கடிதம் மூலம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 157 அனுமதிப் | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களுக்காக இணங்குவதுடன் எதிர் | பெற வேண்டிய அரசிறை சரியாக கணக்கீடு செய்யப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | பத்திரங்களுக்காக கிடைக்க வேண்டிய அரசிறை ரூபா 24.13 மில்லியன் ஆக இருந்தது என கணக்காய்விற்கு அறவிக்கப்பட்ட போதிலும் அது கிடைக்க வேண்டி அரசிறை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | காலத்தில் கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையும் வாடிக்கையாளர்களினால் நேரடியாக பணியகத்தின் வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட ரூபா 19.10 மில்லியன் பெறுவனவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு பதிலாக செலுத்த வேண்டிய மீதியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த நேரடி வைப்புக்கள் தொடர்பாக பணியகத்தின் அகழ்வு மற்றும் புவிச் சரிதவியல் பிரிவிற்கு உரிய வாடிக்கையாளர்களை இனங்கண்டு தேவையான நவடடிக்கை எடுக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | நேரடி வைப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | பணியகத்தின் துணைக் கம்பனியான ஜீஎஸ்எம்பீ டெக்னிக்கல் சேர்விசஸ் (தனியார்) கம்பனிக்கு 2016 முதல் 2020 காலப் பகுதிக்குரிய செலுத்த வேண்டிய ரூபா 5.52 மில்லியன் இடைக்கால கம்பனிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் அப் பெறுமதி அட்டுறு செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | இதனை எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | துணைக் கம்பனிக்கு செலுத்த வேண்டிய நிதி உள்ளகக் கம்பனியின் கொடுக்கல் வாங்கல்களாக சரியாகக் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | பணியகத்தின் பணி நடைமுறை க் கோவையின் 3.6 ஆம் பிரிவின் பிரகாரம் நலன்புரி நிதியத்திற்காக ஒரு அங்கத்தவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூபா 25 வீதம் நிறுவனத்தின் பங்களிப்பு வழங்க வேண்டியிருந்த போதிலும் அதற்காக வருடாந்தம் நிதி ஒதுக்காமல் 2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை 6 மாத காலத்திற்காக 2024 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 2.96 மில்லியன் தொகை 2024 ஆம் ஆண்டில் நலன்புரி செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 2024 ஆம் ஆண்டின் நலன்புரி செலவினத்திற்காக நிறுவனத்தின் பங்களிப்பு ரூபா 1.58 மில்லியனுக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | இதனை சரி செய்து எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நலன்புரி நிலையத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புக்காக ஒதுக்கீடுகள் மேற்கொண்டு சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

#### 1.5.1.2 இணக்கமின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நில புனரமைப்புக்காக அனுமதிப் பத்திர தாரர்களிடம் இருந்து பெறப்பட்ட வங்கிப் பிணை, பணமாக மாற்றியதன் பின்னர் நில புனரமைப்புக் கணக்கிலும், நடைமுறைக் கணக்கிலும் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 514.44 மில்லியன் ஆக இருந்த போதிலும் அப் பெறுமதியை பிரதி நிதித்துவப்படுத்துகின்ற காணி புனரமைப்பு நிதியக் கணக்கின் மீதி ரூபா 423.27 மில்லியன் ஆனமையால் அதற்கு இடையே ரூபா 91.17 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது. | பணியகத்தின் வங்கி பிணைகளுக்கு உரிய காசோலை மக்கள் வங்கி காலி வீதிக் கிளையில் காணப்படுகின்ற புனரமைப்பு நிதியக் கணக்கில் வைப்புச் செய்யப்படுகின்றது. அந்த மீதி அவ்வப்போது நிலையான வைப்புக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது. கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் உரிய வேறுபாடுகள் நிலையான வைப்புக்களில் இருந்து கிடைத்த வட்டி வருமானத்தை மீண்டும் முதலீடு செய்தமையால் கிடைத்த வட்டியாகும். அதனை எதிர்காலத்தில் ஏனைய கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வைப்புக் கணக்கினதும் நிதியக் கணக்குகளினதும் மீதிகளுக்கு இடையே வேறுபாடுகள் ஏற்படாது வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2023 மே 01 ஆந் திகதிய இலக்கம் 236/04/2023 என்ற பணியகத்தின் உள்ளக சுற்றறிக்கையின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம் விண்ணப்பதாரரின் கோரிக்கையின் பிரகாரம் புனரமைப்பு பிணை முறியின் பெறுமதி ஒரே தடவையில் வங்கி பிணை முறி ஒன்றாக அல்லது பணியகத்தால் மீண்டும் செலுத்தப்படுகின்ற வைப்புக்களில் ஒன்றாக பணமாக அறவிட வேண்டி இருந்ததுடன் அவ்வாறு பெறப்பட்ட பணம் நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்த பின்னர் நிலையான வைப்புக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது. அதன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 184.88 மில்லியன் தொகை பணமாகக் கிடைத்த பிணைமுறி, பிணைமுறிக் கணக்கில் காண்பிக்கப்பட்ட போதிலும் அப் பணம் வங்கியில் இடப்படும் நடைமுறை மற்றும் நிலையான வைப்புக் கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 174.75 | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் புனரமைப்பு பிணைமுறி பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் பணியகத்தின் பிரதான அலுவலகத்தின் பிரதேச அலுவலகம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறு பெறப்படுகின்ற பிணைமுறி பணியகத்தின் ஏனைய கணக்கிற்கு வைப்பு செய்யப்படுகின்றது. பிரதேச அலுவலகம் மூலம் பணம் வைப்புச் செய்யும் போது பணியகத்தின் பிரதான கணக்கில் காணப்படுகின்றது. | பணமாகக் கிடைக்கின்ற சகல பிணை முறிப் பணத்தையும் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மில்லியன் ஆனமையால் அதற்கு இடையிலான வேறுபாடு ரூபா 10.13 மில்லியன் ஆகும்.

**1.5.1.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| | விடயம் | தொகை ரூபா மில்லியன் | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | போக்குவரத்து, அகழ்வு மற்றும் படிவு ஆராய்ச்சி அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பதற்காக பெறப்பட்டிருந்த முற்பணம் | 188.49 | விரிவான பட்டோலை மற்றும் காலப் பகுப்பாய்வு | போக்குவரத்து, அகழ்வு மற்றும் படிவு ஆராய்ச்சி அனுமதிப் பத்திரம் விநியோகிப்பதற்காக பெறப்பட்ட முற்பணத் தொகைக்காக 2023 ஆம் ஆண்டு முதல் காலப் பகுப்பாய்வுடன் பட்டோலை தயாரிக்கப்படுவதுடன் எதிர் வரும் கணக்காண்டின் போது இந்த பட்டோலைகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அனுமதிப் பத்திரம் விநியோகிப்பதற்காக பெறப்பட்டிருந்த முற்பண மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வெளிநாட்டு அனுப்புதல்கள் | 2.26 | கிடைக்கப் பெற்றமைக்கான சான்றுகள் | இது நீண்ட காலமாக ஆரம்ப மீதியாக கொண்டு வரப்படுகின்ற ஒன்றாகும். | வெளிநாட்டு அனுப்புதல் பெறுவனவுகளை உறுதிப் படுத்துவதற்கு தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.2** புவிச் சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் துணைக் கம்பனியான ஜீஎஸ்எம்பி டெக்னிக்கல் சேவிசஸ் (பிறைவட்) லிமிடட் இன் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான ஒழுங்குபடுத்துதல் தேவைகள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரகாரம் கணக்காய்வு அபிப்பிராயம் முனைப்பழியற்றதாக்கப்பட்டிருந்தது.

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் | இந்த கடன்பட்டோர் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் | கடன் மீதிகளை அறவிடவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | முதல் கொண்டு வரப்படுகின்ற மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 3.64 மில்லியனாக இருந்ததுடன் 2025 மே 30 ஆந் திகதி வரையில் இந்த மீதி அறவிடப்பட்டிருக்க வில்லை. மேலும் 2016 – 2023 காலப் பகுதியில் மரணமடைந்தமை, சேவையில் இருந்து கேட்டு விலகியமை மற்றும் சேவையை விட்டுச் சென்றிருந்த 06 ஊழியர்களிடம் இருந்து அறவிட வேண்டி இடர் கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி ரூபா 1.23 மில்லியனை அறவிடுவதற்கு 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது எடுக்கப்பட்டுள்ளது. கடன் மீதி எதிர்காலத்தில் அறவிடுவதற்கோ அல்லது கணக்குகளில் இருந்து நீக்குவதற்கோ உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 – 2021 காலப் பகுதியில் பணியகத்தால் செலுத்தப்பட்ட நிறைவேற்று உத்தியோகத்தர்களின் ரூபா 3.88 மில்லியன் கையடக்கத் தொலைபேசிப் பட்டியல் 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக கணக்காய்வு முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த தொலைபேசிப் பட்டியல் செலவினங்களை உரிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அனுமதிப் பத்திரக் கட்டணத்திற்காக 2017 முதல் 2022 காலப் பகுதியில் பணியகத்தில் கிடைக்கப் பெற்ற ரூபா 1.28 மில்லியன் ஆன 13 காசோலைகள் மதிப்பிழந்து இருந்த போதிலும் அவற்றை அறவிடுவதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டுக்கு உரிய 04 காசோலைகளின் தொகையான ரூபா 280,270.37 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் அவ்வாறு ரூபா 101,578.07 தொகையை செலுத்துவதற்கு குறித்துரைத்த நபர் மரணமடைந்திருந்ததையும் அறியத் தருகின்றோம். 2023 ஆம் ஆண்டுக்குரிய ரூபா 170,411.15 காசோலைக்குரிய பணம் அறவிடப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டுக்குரிய ரூபா 600,069.55, ரூபா 783,336.26 மற்றும் ரூபா 43,567.49 காசோலைகளுக்கு உரிய பணம் அறவிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எஞ்சியிருந்த மதிப்பிழந்த காசோலைக்காக பணத்தை அறவிடுவதற்கு உரிய பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | காசோலை மதிப்பிழந்ததன் காரணமாக நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அனுமதிப் பத்திர நலனாளிகளிடம் இருந்து விரைவாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2024 ஆம் ஆண்டின் இறுதியில் 51 அனுமதிப் பத்திரங்களுக்காக ரூபா 10.54 மில்லியன் கிடைக்க | இது தொடர்பாக நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும். | இந்த பெற வேண்டிய அனுமதிப் பத்திரக் கட்டணத் தொகையை |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய அரசிறை நடைமுறைச் சொத்து ஒன்றாக கணக்கீடு செய்யப்பட்ட போதிலும் இப்பெறுமதியை அறவிடுவதற்கு உரிய எந்த ஒரு சட்டரீதியான அல்லது ஏனைய நடவடிக்கைகள் பணியகத்தால் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் எரிபொருள், கட்டிடம் மற்றும் பொருட்கள் மற்றும் சேவை வரிகளுக்காக மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 1.15 மில்லியன் முற்கொடுப்பனவின் கீழ் நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாகக் காண்பிக்கப்பட்டதுடன் அந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும். | இந்த மீதிகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 – 2019 காலப் பகுதியில் பணியகத்தின் உத்தியோகத்தர்களுக்கும் வெளி நிறுவனங்களுக்கும் செலுத்தப்பட்ட ரூபா 2.92 மில்லியன் முற்பணமும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் செலுத்த வேண்டிய முற்பணமாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 766,983 தொகையும் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே ஆய்வுகூட ஆவணங்களின் பிரகாரம் சேவை பெறப்பட்டிருந்த தரப்பினரால் பணம் செலுத்தப்பட்ட சகல பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் போது 2024 ஆம் ஆண்டின் இறுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 6.31 மில்லியன் ஆய்வு கூட முற்பண மீதி ஒன்று நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் பணியகத்தின் உத்தியோகத்தர்களுக்கும் உள்நாட்டில் மேற்கொள்ளப்படுகின்ற கொள்வனவுக்காக வெளி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 2,920,105 தொகை உள்ளடங்கி இருந்த ரூபா 1,500,000 தொகை தவிர எஞ்சிய முற்பணம் எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ரூபா 1,500,000 தொகைக்காக தற்போது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அவ்வாறு ரூபா 1,500,000 இற்காக இலஞ்ச ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவிலும் விசாரணை நடைபெறுகின்றது. ரூபா 6.31 மில்லியன் மீதி தொடர்பாக எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | முற்பண மீதிகளை தீர்த்து வைப்பதற்கும், நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகளைக் காண்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செலுத்த வேண்டிய தேசத்தை கட்டி எழுப்பும் வரி பொறுப்புக்கள் (NBT) ரூபா 3.31 மில்லியன் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கடன் கொடுத்தோரின் கீழ் நிதிக் கூற்றுக்களில் தொடர்ச்சியாகக் காண்பிக்கப்பட்ட போதிலும் தற்போது அந்த வரி கொள்கை அமுல்படுத்தாத நிலைமையில் காணப்படுவதன் கீழ் அப் பெறுமதிகளை தீர்த்து வைப்பதற்கு 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும். | இந்த மீதிகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2009 இன் 66 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப் பொருள் சட்டத்தின் | | | |
| (i) | 12 (உ) பிரிவு | கனிப்பொருள்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தியை அபிவிருத்தி செய்வதன் மூலம் அவற்றை மேம்படுத்தல், செம்மைப்படுத்துதல், பெறுமதி சேர்த்தல்களுக்காக மற்றும் வணிக ரீதியான அடிப்படையில் அந்த கனிப் பொருட்களின் அடிப்படையிலான உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்காக பயன்படுத்த வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்க வேண்டியிருந்த போதிலும் | கனிப் பொருட்களின் பெறுமதி சேர்த்தலுக்கான குறிகாட்டிகளை உள்ளடக்கிய அறிக்கை அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கனிப் பொருட்களுக்கான பெறுமதி சேர்ப்பதற்கும், வணிக ரீதியான அடிப்படையில் அந்த பொருட்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்காக பயன்படுத்த வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக அமைச்சருக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அவ்வாறு மேற்கொள்ளப் பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப் படவில்லை. | | ஆலோசனை வழங்குதல் வேண்டும். |
| (ii) | 52(2) ஆம் பிரிவு | அனுமதிப் பத்திரம் பெற்றவரினால் அந்த அனுமதிப் பத்திரத்தில் இருந்து வழங்கப்பட்ட நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் அல்லது அந்த அனுமதிப் பத்திரக் காலம் காலாவதியான திகதி வரை முன்னர் கைச்சாத்து இடப்பட்ட திகதியின் போது பணியகத்தினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் காணி புனரமைப்பு நடவடிக்கைகள் செய்ய வேண்டி இருந்த போதிலும் 2025 ஆகஸ்ட் 11 ஆந் திகதி வரையிலும் 2713 அனுமதிப் பத்திர நலனாளிகளிடம் இருந்து பெறப்பட்ட ரூபா 462.26 மில்லியன் புனரமைப்பு பிணை முறிகளுக்கு உரிய பணம் பணியகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 316.64 மில்லியன் பெறுமதி 1742 அனுமதிப் பத்திரங்கள் நிலம் புனரமைத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பணியகம் தவறியிருந்தது. மேலும் நிதியினை பெற்றுக் கொள்வதற்கு பணியகம் தவறியிருந்த பிணை முறிகளின் பெறுமதி ரூபா 62.56 மில்லியன் ஆன 268 அனுமதிப் பத்திரங்களுக்கு உரிய புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பணியகம் தவறியிருந்தது. | 2025.08.11 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 462.26 மில்லியனுக்கு புனரமைப்புப் பிணைமுறிகளுக்கு உரிய அகழ்வு நிலங்கள் 2713 இல் ரூபா 316.40 மில்லியனை உடைய அகழ்வு நிலங்கள் 1742 இன் புனரமைப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட வில்லை. புனரமைப்பு பிணைமுறியின் பெறுமதி வங்கியில் இருந்து பணியகத்திற்குக் கிடைக்காத 268 நிலங்களுக்கு உரிய புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை உறுதிப்படுத்தப்பட வில்லை. | புனரமைப்பு செய்யப்பட்ட மற்றும் செய்யப்படாத காணிகள் எவ்வாறானது என்பதை குறித்துரைத்த ரீதியில் இனங்காண்பதற்கு பணியகத்தால் வேலைத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தல் வேண்டும். காணி புனரமைத்தல் மற்றும் பிணை முறிப் பணத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு ஆர்வம் காண்பிப்பதற்காக பிணை முறி தொகையான புனரமைப்பு செய்வதற்கு போதியளவான தொகை பெற்றுக் கொள்ள வேண்டி இருந்ததுடன் அனுமதிப் பத்திர உரிமையாளர் காணிப் புனரமைப்புச் செய்யாது இருக்குமாயின் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான வேலைத் திட்டம் ஒன்று அறிமுகப் படுத்துதல் வேண்டும். பணத்தை வழங்குவதற்கு தவறியிருந்த பிணையாளர்கள் தொடர்பாக ஆய்வினை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | மேற்கொண்டு அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடல் வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பொது முயற்சிகள் நல்லாளுகைக்கான வழிகாட்டி | | | |
| (i) | 2.2.5 ஆம் பந்தி | பணியகத்தின் முகாமைத்துவ சபையினால் துணைக் கம்பனியின் செயற்படு நிலமைகள் நாள்தோறும் மீளாய்வு செய்தல், பணியகத்திற்கு தாக்கம் ஏற்பட்டுள்ள ஆபத்துக்கள் தாக்கம் மற்றும் ஏனைய பிரச்சனைகள் தொடர்பாக அறிவித்தல், உள்ளக கம்பனி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அவதானிப்பை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குவதுடன் எதிர்வரும் முகாமைத்துவ கூட்டங்களின் போது துணைக் கம்பனிகளின் நடவடிக்கைகளை மேற்பபர்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | துணைக் கம்பனியின் நடவடிக்கைகளை நாள் தோறும் மீளாய்வு செய்வதற்கும், ஆபத்துக்களான பிரச்சனைகளை இனங்காண்பதற்கும், உள்ளகக் கம்பனிகளின் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக அவதானிப்பதற்கான வேலைத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (ii) | 2.3 ஆம் பந்தி | அரசாங்கத்தின் தேசிய கொள்கை கட்டமைப்பின் பிரகாரம் உபாயவழித் திட்டம் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் 2019 – 2023 ஆம் ஆண்டின் பின்னர் பணியகத்திற்கு உரியதாக அங்கீகரிக்கப்பட்ட | 2024 – 2028 காலப் பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதும் அது இதுவரை பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட வில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | 2015 மே 25 ஆம் திகதி PED 1/2015 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2022 சனவரி 14 ஆந் திகதிய PED 1/2015(II) பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | சிரேஸ்ட முகாமைத்துவ மட்டத்தின் (HM 1-1) சேவைத் தொகுதிக்கு சமமான அல்லது அதற்கு உயர்ந்த உத்தியோகத்தருக்கு உரித்தான மாதாந்த எரிபொருள் எல்லை லீற்றர் 115 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சிரேஸ்ட முகாமைத்துவ நிலையில் (HM 1-2) சம்பளத் தொகுதிக்கு உரித்தான பணிப்பாளர் (நிதி) இற்காக 2018 முதல் 2024 ஆகஸ்ட் வரை எரிபொருள் லீற்றர் 135 படி ஒன்று மாதாந்தம் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த எரிபொருள் படி வழங்குதல் 2018 ஆம் ஆண்டின் யூன் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. முன்னாள் பணிப்பாளர் (நிதி) ஆக செயற்பட்டிருந்த உத்தியோகத்தரின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் 2024 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் சுற்றாடல் அமைச்சில் நடாத்தப்பட்ட நடவடிக்கைகளின் போது இதனை தீர்க்க வேண்டியிருந்ததாக சுட்டிக்காட்டப்பட்டதுடன் அதன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டின் செப்தெம்பர் மாதம் முதல் 115 எரிபொருள் லீற்றர் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருட் படி செலுத்த வேண்டி இருந்ததுடன் இதுவரை மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2023 மார்ச் 29 ஆந் திகதிய இலக்கம் SEC/2023/E/01 என்ற உளநாட்டு இறைவரி திணைக்கள ஊழியர்களுக்கான ஆலோசனைக் கோவை | வருமான வரி செலுத்துவதற்கு கடப்பாடு உள்ள சகல ஊழியர்களும் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 5 ஆவது பிரிவின் கீழ் சேவை வழங்குனரின் மூலம் வருகின்ற பெறுவனவுகள் மற்றும் இலாபங்களை உள்ளடக்கி இயலுமான எந்த கொடுப்பனவின் அடிப்படையிலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தால் வரி சுட்டறிக்கையின் மூலம் குறித்துரைத்த பிரகாரம் ஒவ்வொரு தொழில் வழங்குனர்களினாலும் 2023 சனவரி 01 ஆம் திகதி | தற்போது சரி செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்படுகளின் பிரகாரம் எரிபொருள் படிக்காக முற்பணம் தனிநபர் வருமான வரி கழிக்க வேண்டி இருந்ததுடன் குறைவாக கழிக்கப்பட்டுள்ள வருமான வரி உரிய உத்தியோகத்தரிடம் இருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முதல் முற்பணம் தனியார் வருமான வரி கழிக்க வேண்டியிருந்த போதிலும் 2023 சனவரி மாதம் முதல் 2024 ஆகஸ்ட் மாதம் வரை பணியகத்தின் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 7.72 மில்லியன் ஆன எரிபொருள் படியின் அடிப்படையில் முற்பண தனியார் வருமான வரி கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | 2023 பெப்ரவரி 20 ஆம் திகதிய இலக்கம் 231/02/2023 என்ற பணியகத்தின் உள்ளக சுற்றறிக்கை | விசேட அனுமதிப் பத்திரம் புதுப்பித்தல் அல்லது தற்போது விநியோகிக்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களின் காலத்தை நீடித்தல் ஆகக் கூடியது 02 சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் மேற்கொள்ள முடியுமான பிரகாரம் விநியோகிக்க வேண்டியிருந்த போதிலும் தெரிவுப் பரிசோதனையின் போது 13 சந்தர்ப்பங்களின் போது அந்த உச்ச ஆகக் கூடிய சந்தர்ப்பத்தை விஞ்சி விசேட அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப் பட்டிருந்தத. | விசேட அனுமதிப் பத்திரம் வழங்கும் போது மேற்கொள்ள வேண்டிய முறைகேடுகளைத் தவிர்க்கும் நோக்கில் நீண்ட காலத்தில் 02 சந்தர்ப்பங்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. எனினும் பணியகத்தின் அபிப்பிராயத்தின் பிரகாரம் விநியோகிக்கப் பட்டுள்ள சில விசேட அனுமதிப்பத்திரங்களுக்கு உரிய பணியகத்தின் தன்மையின் அடிப்படையில் கால நீடிப்பு தேவையாக இருக்குமாயின் கனிப் பொருள் ஒழுங்குபடுத்துதல் நோக்கத்திற்கு உரிய விசேட அனுமதிப் பத்திரம் தொடர்ந்தும் நீடிப்பதற்கு பணியகம் அனுமதி வழங்குகின்றது. எனினும் இந்த நடவடிக்கைகள் மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைக்கு முரணாக இருந்த போதிலும் பணிப்பாளர் நாயகத்திற்கு இது தொடர்பாக தீர்மானம் எடுக்க முடியுமாக இருந்தமையால் அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது | விசேட அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்கும் போது ஆகக் கூடிய சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையை விஞ்சி நடவடிக்கை எடுக்க முடியாது இருந்ததுடன் அவ்வாறு எல்லையினை விஞ்சி எடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களின் முறைகேடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததா தொடர்பாக பரிசோதனைகளை நடாத்தி பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் களுக்காக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | அந்த தேவையினை கவனத்தில் கொண்டு அதற்கு உரித்தான வகையில் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் கீழ் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 701.54 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,159.67 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 458.13 மில்லியன் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஆண்டின் வருமானம் ரூபா 319.66 மில்லியனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 ஒக்தோபர் 08 ஆந் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் SCAppeal 137/2017 என்ற மேல் நீதிமன்ற வழக்கு தீர்ப்பின் பிரகாரம் பணியகத்தால் அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது அதற்காக ஆர்வம் காண்பிக்கும் தரப்பினருக்காக சகல சந்தர்ப்பத்தின் போது வழங்கக் கூடிய முறையில் அனுமதிப் பத்திரம் வழங்குதல் வேண்டும். எனினும் காணப்படுகின்ற முறைமை, வழக்கு தீர்ப்புக்கு இணங்க மீண்டும் மீளாய்வு செய்ய வேண்டி இருந்ததாக பணியகம் தீர்மானித்து அதன் பிரகாரம் அந்த முறைமையை மீண்டும் தயாரிக்கும் வரை படிவு அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல் பணியகத்தால் அத் திகதியில் இருந்து தற்காலிகமாகக் கைவிடப்பட்டிருந்தது. எனினும் அந்த திட்ட முறைமை 2025 மே 30 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்படாது இருந்ததுடன் பிரதான வருமானம் உழைக்கின்ற வழியாக இனங்காணக் கூடிய படிவு அனுமதிப் பத்திரம் விநியோகித்தல் தற்காலிகமாக கைவிடப்பட்டதன் காரணமாக 2025 மே 30 ஆந் திகதி வரையில் 50 விண்ணப்பதாரர்களிடம் இருந்து கிடைத்த ரூபா 75.32 மில்லியன் அனுமதிப் பத்திரக் கட்டணம், முற்பணக் கணக்கில் நிறுத்தி | இதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது வரைவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட குழு அறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். | அனுமதிப் பத்திரத்தை வழங்கும் போது அதற்காக ஆர்வம் காண்பிக்கின்ற தரப்பினருக்கு சகல சந்தர்ப்பத்திலும் வழங்குவதற்கு முடியுமான வகையில் திட்ட முறைமை ஒன்றை விரைவாக தயாரித்து அனுமதிப் பத்திரத்தை விநியோகித்தலை ஆரம்பித்தல் வேண்டும். |

வைப்பதற்கு பணியகத்திற்கு ஏற்பட்டு இருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிலாபம் பெருந்தோட்ட கம்பனிக்கு உரிய புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள மொக்குதொடுவாவ தோட்டத்தில் மணல் அகற்றுவதற்காக தனியார் கம்பனிக்கு மாதாந்த உற்பத்தி எல்லை 500 கியூப் இற்கு மேற்படாமல் மற்றும் அகழ்வு செய்யக் கூடிய மொத்த அளவு 9400 கியூப் ஐ விஞ்சாத வகையில் அகழ்வு நிபந்தனையின் கீழ் இலக்கம் IML/C/HO/N/17006 என்ற கைத் தொழில் அகழ்வு அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த அனுமதிப் பத்திரம் 2023 திசெம்பர் 14 ஆந் திகதி முதல் 2024 செப்தெம்பர் 13 வரை 03 சந்தர்ப்பங்களின் போது புதுப்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது. | | |
| (i) | ஜீஎஸ்எம்பி டெக்னிக்கல் சேவிஸ் (தனியார்) கம்பனியால் 2024 திசெம்பர் 19 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட அகழ்வு செய்யப்பட்ட மணல் அளவின் மதிப்பீடு செய்யும் அறிக்கையின் பிரகாரம் ஒப்பந்தகாரால் மணல் கியூப் 36,531 முதல் 45,561 வீச்சில் மணல் இருப்பு அகற்றப்பட்டு 1,594 கியூப் இற்காக மாத்திரம் அரசிறையாக ரூபா 686,464 பணியகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.<br>அறிக்கையில் கீழ் வீச்சினை மாத்திரம் கவனத்தில் கொள்ளும் போது கியூப் 34,937 இற்காக ரூபா 12.73 மில்லியன் அரசிறை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த அனுமதிப் பத்திரத்தின் நிபந்தனை இலக்கம் 06 இன் பிரகாரம் மாதாந்த உற்பத்தி எல்லை 500 கியூப் இற்கு விஞ்சாமலும் அகழ்வு மேற்கொள்ளக் கூடிய மொத்த கியூப் இன் அளவு 9400 இற்கு விஞ்சாது இருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. | இழக்கப்பட்டிருந்த அரசிறையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் மேற்பார்வைக்கு பொறுப்பான உத்தியோகத்தர் அவற்றின் பொறுப்பை நிறைவேற்றாமை தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2920 மணல் கியூப் அளவில் போக்குவரத்து செய்வதற்காக அனுமதிப் பத்திரம் பணியகத்தால் வழங்கப்பட்டிருக்கும் போது அறிக்கையின் கீழ் வீச்சினைக் கவனத்தில் கொள்ளும் போது 33,611 கியூப் மணல் இருப்பு ஒன்று அனுமதிப் பத்திரம் இன்றி போக்குவரத்து செய்யப்பட்டிருந்தது. | 2023.12.18 ஆந் திகதி முதல் 2024.08.12 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் பணியகத்தில் இந்த அனுமதிப் பத்திரத்திற்கு உரிய 2,920 கியூப்களுக்கு உரிய போக்குவரத்து அனுமதிப் பத்திரங்கள் 103 விநியோகிக்கப்பட்டிருந்தது. | இழக்கப்பட்ட அனுமதிப் பத்திரக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2024 செப்தெம்பர் 13 வரை அனுமதிப் பத்திரத்தை புதிப்பதற்கு உரியதாக விதிக்கப்பட்டிருந்த புதிய நிபந்தனையின் படி கால எல்லையை விஞ்சுகின்ற திகதியின் போது அகழ்வு செய்யப்பட்ட நிலம் பணியகம் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக காண்பிக்கப்பட்ட போதிலும் இந்த புனரமைப்பு நடவடிக்கைகள் தேவையான பிரகாரம் மேற்கொள்ளப் பட்டிருந்ததா என பரீட்சிப்பதற்கு புத்தளம் பிரதேச அலுவலகத்தால் 2025 மே 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக களப் பரிசோதனை மேற்கொண்டு உரிய அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | புனரமைப்பு நடவடிக்கைகள் உரிய பிரகாரம் மேற்கொள்ளப் பட்டிருந்ததா என்பதற்காக விரைவான பரிசோதனை ஒன்று மேற்கொண்டு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிறுவன வள திட்டமிடல் முறைமை (ERP) ஸ்தாபிப்பதற்காக ரூபா 1.63 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் 2023 பெப்ரவரி 20 ஆந் திகதி அந்த பணிகளை நிறைவேற்றாமல் இருப்பதற்கு பணியகம் தீர்மானித்து இருந்தது. எனினும் பணியகத்தின் தற்போதய செயற்பாடுகள் மற்றும் நிதி தேவைகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் ERP முறைமை ஒன்று ஸ்தாபிக்கும் தேவையாக இருந்த போதிலும் இதுவரை அதற்காக நடவடிக்கை எடுக்காமல் 20 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய பணியகத்தின் மென்பொருள் முறைமை | வருடாந்த பாதீட்டில் ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டின் பிரகாரம் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட 60 கணனிகளும் இந்த செயற்திட்டத்தில் ஈடுபடுத்தும் இரட்டை நோக்கில் முன்னைய பாதீட்டில் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் அடிப்படையில் உரிய கணனி உறுப்புக்கள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் அதற்கு இணையாக மேற்கொள்ளப்பட்டது. ERP முறைமை ஸ்தாபிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் தற்போது வரையில் மேற்கொள்ளப்படுவதுடன் | முயற்சி வள திட்ட முறைமை ஸ்தாபிக்கு நடவடிக்கைகளை விரைவாக அமுல்படுத்த வேண்டி இருந்ததுடன் மூலதன செலவினத்தில் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டை பயன்படுத்தும் போது அந்த தேவைகளை முறையான பிரகாரம் இனங்காணுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடாந்தம் ரூபா 1.04 மில்லியன் பராமரிப்பு செலவினத்தை மேற்கொண்டு பேணிச் செல்லப்படுகின்றது. ERP முறைமை ஸ்தாபிக்கும் நோக்கில் ரூபா 20.39 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட 60 கணனிகள் பிரதேச அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. | பொருத்தமான மென்பொருளை அபிவிருத்தி செய்கின்ற நிறுவனம் ஒன்றை தெரிவு செய்வதற்கு காணப்பட்ட தொழில் நுட்ப இடையூறுகளின் காரணமாக பணிகள் தாமதம் அடைந்திருந்தது. எனினும் வருடாந்த தேவையின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட 60 கணனிகள் அந்த பிரதேச அலுவலகங்களில் நாளாந்த தேவைகளுக்காக தற்போது விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் அதன் ஊடாக அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கும் போது கணனிகளில் காணப்படுகின்ற தொழில் நுட்ப இடையூறுகளை மாற்றியமைத்து ஏதோவொரு வகையில் அதனை முறைமைப்படுத்துவதற்கு முடியுமாக உள்ளது.<br>ERP முறைமை ஸ்தாபிக்கும் இரண்டாவது கட்டத்தை மீண்டும் அமுல்படுத்தப்படுவதுடன் கொள்வனவு செய்யப்பட்ட கணனிகளை நாளாந்த தேவைகளுக்காக பயன்படுத்தி அனுமதிப் பத்திரத்தை விநியோகத்தலை முறைமைப் படுத்தப்பட்டுள்ளமையால் இதற்காக செலவிடப்பட்ட செலவினம் பயனற்றதாக இருக்கவில்லை. | |
| (இ) | 2012 ஆம் ஆண்டு முதல் 2025 ஆகஸ்ட் 11 ஆந் திகதி வரையான காலப் பகுதியில் அகழ்வு அனுமதிப் பத்திரங்கள் 362 இற்கு உரிய ரூபா 80.87 மில்லியன் பெறுமதியான பிணைமுறி, பணமாக்கி கொள்வதற்காக உரிய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அந்த பணம் பணியகத்திற்கு கிடைக்கப் பெறாது இருந்ததுடன் தற்போது வரையில் இந்த பிணை முறி காலாவதியாகி இருந்தது. அதற்கு மேலதிகமாக ரூபா 15.75 மில்லியன் பெறுமதியான 75 | இந்த 362 அனுமதிப் பத்திரங்களுக்கு உரிய வங்கிப் பிணை வைப்பை மேற்கொள்வதற்கு வங்கிக்கு கடிதம் அனுப்பி மீள் நினைவூட்டல் கடிதமும் அனுப்பப்பட்டது. எனினும் பணியகத்திற்கு பணம் செலவு வைக்கப்படவில்லை. கொவிட் தொற்று நோய் காணப்பட்ட காலத்தில் காலவதியாவதற்கு முன் வங்கிக்கு கடிதம் அனுப்புதல் தாமதம் அடைந்த 75 வங்கி பிணைகளுக்காக பிணைமுறிகளுக்காக | இதில் ஏற்பட்ட நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பிணைமுறிகள் 2020 ஆம் ஆண்டின் போது காலாவதியாவதற்கு முன்னர் பணமாக்கிக் கொள்வதற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க இல்லை. அதன் பிரகாரம் ரூபா 96.62 மில்லியன் பிணை முறிப் பணம் பணியகத்தின் பின்தொடர் நடவடிக்கையில் மேற்கொள்ளாமையின் காரணமாக பெற முடியாமல் இருந்தது. | பணிகத்தின் உள்ள கணக்காய்வுப் பிரிவினால் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது. | |

## 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டில் ரூபா 4.4 மில்லியன் செலவில் பிரதான அலுவலக வளவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த எரிபொருள் தாங்கி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயனற்றுக் காணப்பட்டது. | ஏற்பட்ட அவசர எரிபொருள் பற்றாக்குறைக்கு தீர்வாக இது ஸ்தாபிக்கப்பட்ட போதும் பின்னர் எரிபொருள் வழங்குதல் முறைமைப்படுத்துல், தாங்கி மற்றும் பம்பி ஸ்தாபிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரூபா கணக்கு ஊடாக எரிபொருள் விநியோகித்தல் கைவிட்டு டொலர் இருப்பு விநியோகிக்கும் கொள்கையின் காரணமாக இது எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் பயன்பாட்டு எடுக்க முடியாது இருந்தது.<br>பணிப்பாளர் சபை வழங்கியிருந்த ஆலோசனையின் படி மூன்றாவது தடவை பத்திரிகை அறிவித்தல் ஊடாக இதனை விற்பனை செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருந்தது. | தேவையற்ற செலவினங்களை மேற்கொள்வதற்கு தீர்மானித்த உத்தியோகத்தர்கள் இந்த பயனற்ற செலவினத்திற்காக பொறுப்பாக இருக்க வேண்டியதுடன் தாங்கியை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 திசெம்பர் 31 ஆம் திகதி முதல் கட்டாய விடுமுறை அனுப்பப்பட்ட பணிப்பாளர் (மனிதவளம்) தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் 2024 செப்தெம்பர் 10 ஆந் திகதி நடாத்தப்பட்டிருந்தது. உத்தியோகத்தருக்கு எதிராக | ஆரம்ப விசாரணை அறிக்கையின் படி அந்த பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது மனித பணிப்பாளர் மனித வள பதவிக்கு உரிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் | பரிசோதனை நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குற்றஞ்சாட்டுவதற்குப் போதியளவான விடயங்கள் காணப்படுமாயின் உரிய ஒழுக்காற்று உத்தியோகத்தரால் குற்றப்பத்திரிகை உத்தியோகத்தருக்கு முறையாக விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது இருந்ததுடன் முறையான ஒழுக்காற்று பரிசோதனையும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.<br>அதனால் 1½ வருட காலத்திற்காக அவரின் சேவை பெறாமல் சம்பளம் செலுத்தப்பட்டதுடன் 2025 மே வரை அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை ரூபா 1.89 மில்லியன் தொகை ஆகும். | பூர்த்தி செய்யப்படாமையினால், பணியகத்தின் உத்தியோகத்தரால் பல சந்தர்ப்பத்தின் போது வழங்கப்பட்ட வெளிப்படுத்தப்பட்ட விடயங்களுக்கு சமமாக இருந்தமையால் அவர் தொடர்ந்தும் உரிய பதவியில் சேவையில் ஈடுபடுத்தல் தொடர்பான தீர்மானம் எடுத்தல் பொருத்தமானது எனவும்<br>- விடுவிப்புக்கான காரணங்களை விசாரணை செய்வதற்காக அவரால் பதிலளிக்கப்படாதிருக்குமாயின் அவரின் பதில் செல்லுபடியற்றதாக இருந்தமையால் ஒழுக்காற்று நடவடிக்கைகளின் தேவை ஏற்படவில்லை எனவும்<br>அந்த பரிந்துரையின் படி தீர்மானம் எடுப்பதற்காக முகாமைத்துவ சபைக்கு அனுப்பப்பட்ட பின்னர் அவரினால் காண்பிக்கப் பட்ட தகைமைகள் மற்றும் அநுபவங்களை மீண்டும் பரீட்சிப்பதற்காக பணியகத்தில் இருந்தும் சுற்றாடல் அமைச்சில் இருந்தும் மற்றும் அரச நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உத்தியோகத்தர்கள் மூன்று பேரை உள்ளடக்கிய குழு ஒன்றின் தீர்மானம் எடுக்ககப்படுகின்றது. அதன் பிரகாரம் உரிய குழு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. | |
| (ஆ) | 2024 மே 17 ஆந் திகதி 344 ஆவது முகாமைத்துவ சபை கூட்டத் தீர்மானத்தின் படி 2024 யூலை 15 ஆந் திகதி முதல் மனிதவள ஆலோசனையாளர் ஒப்பந்த அடிப்படையில் | பணியகத்தின் முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிப்பதற்கும் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் மனித வள | மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் ஆலோசனையாளரிடம் |

| | | | |
|---|---|---|---|
| | பணியகத்திற்கு சேர்ப்பதற்கும், அவரின் சம்பளமாக மனித வள பணிப்பாளரின் ஆரம்ப சம்பளத்தை ஈடுபடுத்துவதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மனித வள பணிப்பாளருக்கு செலுத்த வேண்டிய அடிப்படை சம்பளம் ரூபா 81,670 ஆகக் காணப்படும் போது ரூபா 175,000 வீதம் 2024 யூலை 15 ஆம் திகதி முதல் 2025 ஏப்ரல் 15 ஆம் திகதி வரை செலுத்தப்பட்டதுடன் இதன் போது மேலதிக சம்பளமாக ரூபா 839,933 செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு பணியகத்தின் மனிதவள திட்டங்களை தயாரித்தல் மற்றும் மனித வள கணக்காய்வை மேற்கொள்வதற்கு உரிய பணிப் பொறுப்புக்கள் இந்த ஆலோசனையாளருக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டதா என உறுதிப்படுத்த முடியாது இருந்தது. | ஆலோசனையாளர் சேர்க்கப்பட்டிருந்தார். மனித வளப் பிரிவின் செயற்பாட்டு பங்களிப்பை வழங்கத் தேவையான திட்டங்களை தயாரிப்பதற்கு தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்திற்கு கையளிக்கப்பட்டதுடன் அதில் முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இருந்து பணிப் பொறுப்புக்களை உரியவாறு மேற்கொள்ளப்பட்டிருந்தத ா என உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் கனிய அகழ்வு, தயாரித்தல், வியாபாரம் செய்தல் என்பவற்றை சுற்றி வளைக்கும் நோக்கில் அதிகாரமளிக்கப்பட்ட பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்ட போதிலும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட 06 உத்தியோகத்தர்களின் பதவிகளில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 03 பதவிகள் தொடர்ச்சியாக வெற்றிடமாகக் காணப்பட்டதன் காரணமாக சட்ட ரீதியான சுற்றி வளைப்புக்களை மேற்கொள்வதற்கு இடையூறாக இருந்தது. | வெற்றிட பதவிகளை நிரப்புவதற்காக பிரதமர் அலுவலகத்தில் ஆட்சேர்த்தல் மீளாய்வு குழுவிற்கு சுற்றாடல் அமைச்சு ஊடாக கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. சுற்றாடல் அமைச்சின் அங்கீகாரத்துடன் பிரதமர் அலுவலகத்திற்கு உரிய கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதாக எமக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் சட்ட விரோத சுற்றி வளைப்புக்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |